தமிழ்வழி பரீட்சைகள்

# முதலாம் தவணைப் பரீட்சை

தரம் 08

தமிழ் மொழியும் இலக்கியமும் I, II
Tamil Language and Literature I, II

Two hours
இரண்டு மணித்தியாலங்கள்

A/L Geography ACCOUNTING WORLD 2 ஆம் குறுக்கு வீதி, மன்னார்
இனிது கல்வி நிலையம் பாலிநகர், வவுனிக்குளம்
Personal & Group Class 6-11 - TAMIL A/L - GEOGRAPHY

தமிழ்வழி கற்றலுக்கான ஒளி

## தமிழ் மொழியும் இலக்கியமும் I

பரீட்சைத் தொடர் Examination Series 2

**கவனிக்க:**

* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ் வினாத்தாளுக்குரிய **புள்ளிகள்** 100 ஆகும்.
* 1 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் 1, 2, 3, 4 என எண்ணிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவு செய்க.
* அறிவுறுத்தல்களுக்கு அமைவாக பகுதி II இலுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக. ..............................

- **பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்தில் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. "ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" – இங்கு **ஓம்பல்** என்பதற்கு **நிகரான சொல்.**
   1. கெடுத்தல் 2. கொடுத்தல் 3. பாதுகாத்தல் 4. விரும்புதல்

2. பேராசிரியர் உவைஸ் அவர்களின் பணிகள் விதந்து குறிப்பிடத்தக்கன" – இங்கு **விதந்து** என்பதன் ஒத்தசொல்.
   1. மறைவின்றி 2. சிறப்பித்து 3. அழகுபடுத்தி 4. வெளிப்படையாக

3. "நல்லம்மாவுன் தோழியுடன்
   நாளுங் கூடித் திரிகின்றாய்" – இங்கு **தோழி** என்பதன் ஒத்தசொல் **அல்லாதது**.
   1. பாங்கன் 2. நண்பி 3. சிநேகிதி 4. சகி

4. "போனவன்தான் வரும் அவதி போயிற்று" – இங்கு **அவதி** என்பதன் ஒத்தசொல்.
   1. உண்மை 2. துன்பம் 3. ஆட்சி 4. உயிர்

5. "இந்த நாட்டுக்கு விடுதலை கிடைக்குமா என்கிற ஐயப்பாடு அவர் உள்ளத்தில் எழுந்தது" – இங்கு **ஐயம்** என்பதன் எதிர்ச்சொல்.
   1. சந்தேகம் 2. தோல்வி 3. உறுதிப்பாடு 4. தெளிவு

6. கம்பராமயாணத்திலே **ஒரேயொரு** பாட்டை உடையவன்.
   1. இராமன் 2. அனுமன் 3. சத்துருக்கன் 4. இராவணன்

7. "கடலில் தத்தளித்த மீனவர்கள் கொம்பாஸைப் பயன்படுத்தி கரைசேர்ந்தனர்" – இங்கு **கொம்பாஸ்** *(Compass)* எனக் குறிப்பிடப்படுவது எதனையாகும்?
   1. ஒலிவாங்கி 2. நுணுக்குக்காட்டி
   3. தொலைநோக்கி 4. திசையறிகருவி

8. தமிழ் நெடுங்கணக்கிலுள்ள மொத்தக் குறில் எண்ணிக்கை.
   1. 05 2. 133 3. 90 4. 95

9. **"பேராசிரியர் ம.மு உவைஸ்"** எனும் கட்டுரையை எழுதியவர்,
   1. கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை 2. க. சச்சிதானந்தன்
   3. மு. வரதராசன் 4. பேராசிரியர் சி.தில்லைநாதன்

**10.** **பத்து** ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதியைக அழைப்பது

1. தசாப்தம் 2. சகாப்தம் 3. சஷ்டியப்தம் 4. சதாப்தம்

**11.** **செம்மை** – என்பது

1. சினைப்பெயர் 2. இடப்பெயர் 3. பண்புப்பெயர் 4. கூட்டுப்பெயர்

**12.** **ஓடினான்** – என்ற சொல்லில் இடம்பெற்றுள்ள **கால இடைநிலை**

1. இ 2. இன் 3. ஆன் 4. ன்

**13.** "பானையில் இருந்தால்தானே அகப்பையில் வரும்" – இங்கு **'இல்'** உருபு பெற்றுவந்த பொருள்.

1. காரணம் 2. நீங்கல் 3. இடம் 4. உடைமை

**14.** "அயோத்தியை ஆண்ட இராமன் குடிமக்களுக்கு இனியன்"– இங்கு **இனியன்** என்பது

1. தெரிநிலை வினைமுற்று 2. முற்றுவினை 3. குறிப்பு வினைமுற்று 4. வியங்கோள் வினை

**15.** கட்டுரையொன்றில், கட்டுரையாசிரியர் தனது கருத்தை முன்வைக்கக்கூடிய **கட்டுரை உறுப்பு**

1. அறிமுகம் 2. முகவுரை 3. முடிவுரை 4. உள்ளடக்கம்

**16.** "ஆசிரியரோடு மாணவன் வந்தான்" – இங்கு **'ஓடு'** உருபிற்குப் **பதிலாக**ப் பயன்படுத்தக்கூடிய **சொல்லுருபு.**

1. ஆக 2. கொண்டு 3. உடைய 4. உடன்

**17.** "தம்பி ஓவியம் வரைந்தான்" – இங்கு **வரைந்தான்** என்பது,

1. தெரிநிலை வினை 2. முற்றுவினை 3. குறிப்பு வினை 4. செய்வினை

**18.** **பறவை** – என்பது.

1. இடுகுறிப்பெயர் 2. காரணப்பெயர் 3. காரணவிடுகுறிப்பெயர் 4.தொழிற்பெயர்

**19.** "**கூண்டிற்கிளி**" என்ற கட்டுரையின் எந்தத் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டதாகும்?

1. கம்பன் கலை 2. பறவைகள் 3. கவிதைப் பூம்பொழில் 4. இலங்கைத் தமிழ் இலக்கியம்

**20. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்கு பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.**

(அ) அவர் தீட்டிய திட்டத்தை அனைவரும் ஏற்றுக் கொண்டனர்.
(ஆ) தம் நண்பர்களை ஒருங்குகூட்டிச் சந்தித்தார்.
(இ) தம் திட்டத்தைப் போர் வீரர்களுக்குத் தெரிவித்தார்.
(ஈ) அவர்களுடன் கலந்தாலோசித்தார்; படைகளை ஒன்று திரட்டினார்.
(உ) சிலந்திப் பூச்சியை நினைத்துக்கொண்டே ஊக்கத்தோடும், உறுதியோடும் மறைவிடத்திலிருந்து வெளியே வந்தார்.

1. அ, இ, ஆ, உ, ஈ 2. உ, ஈ, ஆ, இ, அ
3. உ, ஆ, ஈ, இ, அ 4. உ, இ, ஆ, அ, ஈ

**(20 X 2 = 40 புள்ளிகள்)**

## தமிழ் மொழியும் இலக்கியமும் II

**01. கீழே தரப்பட்டுள்ள பாடலை வாசித்து, அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடையெழுதுக.**

கொட்டிடுவாய் மழையே – நாங்கள்
குதூகலம் எய்திடவே
சொட்டுச் சொட்டாய்த் தொடங்கி – மழையே
'சோ'வெனப் பெய்திடுவாய்.

வளைவுகட்டி வைத்தே – பெரியார்
வரவு நோக்குதல் போல்
வளைந்த வானவில்லும் – உனது
வருகை காட்டிடுமே.

நெற்றியில் நீர் சொரிய – உழவர்
நிலம் உழுத பின்பும்
வற்றிய குட்டை கண்டால் – உடனே
மாமழை பெய்திடுவாய்.

(அ) மழை நன்றாகப் பெய்தல் வேண்டும் என்பதைக் குறிக்க கவிஞர் பயன்படுத்தும் **இரண்டு** தொடர்களை எழுதுக.

(ஆ) **வானவில்** பற்றி கவிஞர் கூறுவது என்ன?

(இ) உழவனுக்கும் மழைக்கும் இடையேயுள்ள **தொடர்பு** என்ன?

(ஈ) உழவனது கடின உழைப்பு இங்கு எவ்வாறு கூறப்பட்டுள்ளது?

(உ) **ஒத்தபொருள்** தருக.

(1) குதூகலம் (2) குட்டை

**(10 புள்ளிகள்)**

**02. பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

(அ) விஞ்ஞானமும் மனித வாழ்வும்

(ஆ) ஒழுக்கத்தின் உயர்வு

(இ) கடற்கரையில் ஓர் மாலைப் பொழுது

(ஈ) நான் ஒரு பறவையானால்..... **(15 புள்ளிகள்)**

**03. பின்வருவனவற்றுள் ஏதாவது ஒன்றினைத் தெரிவு செய்து ஏறக்குயை 75 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.**

சுகவீனமுற்றிருக்கும் உங்கள் உறவினர் ஒருவருக்கு ஆறுதல் கூறியும், அவர் நலமுற வேண்டிப் பிரார்த்தித்தும் அவ் உறவினருக்கு ஒரு **கடிதம்**

**அல்லது**

உங்கள் பிரதேசத்தின் சிறப்புகளை விவரித்து, அவற்றைப் பார்வையிட வருமாறு அழைத்து உமது நண்பன் **அல்லது** நண்பிக்கு ஒரு **கடிதம்** **(10 புள்ளிகள்)**

**04. பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.**

1) பேராசிரியர் ம.மு. உவைஸ் அவர்கள் எந்தப் பல்கலைக் கழகத்திலிருந்து கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்?

2) நூல் வாசிப்பால் ஏற்படக்கூடிய நன்மைகள் **இரண்டு** தருக.

3) "நூல்களை ஒருவர் விரும்பி வாசிக்க வேண்டும்; வாசிக்குமாறு ஒருபோதும் வற்புறுத்தக் கூடாது" – இக் கூற்று **யாரால் யாருக்குக்** கூறப்பட்டதாகும்?

4) **வேற்றுமை** என்றால் என்ன?

5) **முதலெழுத்துக்கள்** – என்பதனுள் உள்ளடங்கும் எழுத்து வகைகள் யாவை?

6) ஐந்தாம் வேற்றுமையின் **பொருள்கள்** யாவை?

7) கட்புலனைப் பொறுத்தவரை பறவைகள் கொண்டுள்ள **மிக உயர்வான** இசைவாக்கம் எத்தகையதாகும்?

8) **காரணவிடுகுறிப்பெயர்** என்றால் என்ன?

9) வியாபாரி தனது மகன் மீது ஏன் கோபமடைந்தார்?

10) முற்றுவினையின் **இரண்டு** வகைகளும் யாவை?

**(20 புள்ளிகள்)**

**05. பின்வரும் பந்தியில் வழுவுடைய சொற்களை <u>மாத்திரம்</u> வழு நீக்கி எழுதுக.**

இன்றைய இளைஞர்கள் உணர்ச்சிவசப்படுபவர்கள் நாகரீக மோகம் கொண்டவர்கள் சமுக அக்கறை அற்றவர்கள் என்று இளைஞ்ஞர் சமுதாயத்தின் மீது சிலர் குற்றம் சுமத்துகின்ரனர். இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதொன்றே. **(05 புள்ளிகள்)**

* * *

**பெற்றோர் குறிப்பு:**

..............................................

**பெற்றோர் / பாதுகாவலர் ஒப்பம்**